Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 29 (13-01-1993) புதன்கிழமை ஓசை 330

## 'குமாரி' கப்பலில் பரீட்சை முடிவுகள்

அண்மையில் வெளியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ்.மாவட்டப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் குமாரி கப்பலில் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. கொழும்பில் இருந்து யாழ். குடாநாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இன்னும் சில நாட்களில் பருத்தித்துறையை வந்தடையுமென எதிர்பார்க்கப் (6-ம் பக்.பார்க்க)

# தனிமாகாண சமஷ்டி தெரிவுக்குழு திட்டம்

## விரைவில் அறிக்கை வெளிவரும்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனி சமஷ்டி அமைப்பு முறையினை உருவாக்கும் தீர்வுத்திட்டம் ஒன்றை பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதித் தீர்வாக முன்வைக்கவுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

மேலும், பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கவுள்ள தீர்வுத்திட்டம், பேரளவில் சமஷ்டி அமைப்பு என இருப்பினும் இந்திய சமஷ்டி அமைப்பை ஒத்தது போன்ற அரை சமஷ்டி அமைப்பாகவே இருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை இவ் தனித்தனி மாகாணங்களுக்கான சமஷ்டி அமைப்பு முறையின் இறுதி நகல் திட்டம் வரையப்படுவதாகவும், விரைவில் இத்தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்திடம் சமர்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## சமஷ்டித் தீர்வுக்கு எதிராக பிரசாரம் ஆரம்பம்

[கொழும்பு]

சமஷ்டி அமைப்பு முறைக்கு எதிராக பௌத்த அமைப்புகளின் ஒன்றியம் தெற்கில் கூட்டங்களை நடாத்தி வருகின்றது. பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் வாயிலாக இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்படவுள்ள சமஷ்டி அமைப்பு முறையானது ஒன்றிணைந்த இலங்கைக்கு எத்தகைய குந்தகங்களை ஏற்படுத்தும் என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவே தெற்கில் பரவலாக இவ்வாறான கூட்டங்கள் தொடர்ச்சியாக நடாத்தப்படும் என உலகமகாசங்க சம்மேளனம் [பௌத்த அமைப்புகளின் ஒன்றியம்] இவ் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக தெரியவருகிறது.

இத்தகைய கூட்டத்தொடரின் முதலாவது கூட்டம் கடந்த 10ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு மெத கொட சுமண திஸ்ஸ தேரரின் தலைமையில் கம்பஹா சாம விகாரையில் நடைபெற்றது.

இவ்வமைப்பில் சிறிலங்கா ஐக்கிய பௌத்த மகா சம்மேளனம், தேசப் பிரேமி, (6 ஆம் பக்கம் பார்க்க)

மட்டுவில் வடக்கில்

## சுப்பர் சொனிக் தாக்குதல் அதிர்ச்சியால் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையின் இரண்டு சுப்பர்சொனிக் குண்டுவீச்சு விமானங்கள் மட்டுவில் வடக்கு மக்கள் வாழ்விடங்களை நோக்கி குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

எனினும் குண்டுகள் வெறும் வளவொன்றில் வீழ்ந்து வெடித்ததினால் உயிர்ச்சேதம் பொருள் சேதம் என்பன பெருமளவில் தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இருந்தும் அப்பகுதியை அண்மித்து நின்ற பெண் ஒருவர் அதிர்ச்சியினால் மரணமானார் என தெரியவருகின்றது.

நேற்று காலை 8.00 மணியளவில் திடீரென தென்மராட்சிப்பகுதியை வட்டமிட்ட இவ் இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் மட்டுவில் வடக்கு பகுதியை இலக்கு வைத்து அடுத்தடுத்து மூன்று குண்டுகளை வீசியது. இக்குண்டுகள் அப்பகுதியில் அமைந்துள்ள மட்டுவில் யூனியன் பாடசாலையை அண் [6 ஆம் பக்கம் பார்க்க]

## அரச அடக்குமுறைக்கு எதிராக கிளிநொச்சியில் நேற்று பேரணி

(கிளிநொச்சி)

சிறிலங்கா இனவாத அரசின் முற்றுகைப் போர், திட்டமிட்ட கல்விச் சீர் குலைப்பு தென் தமிழீழத்தில் தொடர்ந்தும் செய்யப்படும் இனப் படுகொலைகள் மற்றும் கிளாலிக் கடல் பகுதியில் திட்டமிட்டு பொதுமக்கள் கொல்லப்பட்டமை, கிளாலியூடாகப் பயணம் செய்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைபோன்றவற்றைக் கண்டித்தும் இவற்றை எதிர்க்கும் முகமாக மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்றை வன்னி மாவட்ட வெகுஜன ஒன்றியத்தினால் நேற்று கிளிநொச்சியில் நடாத்தப்பட்டது.

பேரணியில் இருபதாயிரத்துக்கும் மேலான மக்கள் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது கலந்து கொண்டனர். ஆசிரியர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், விவசாயிகள் பொது மக்கள் போன்றோர் ஆயிரக்கணக்கில் ஊர்வலத்தில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இப் பேரணி கரடிப்போக்குத் தென்திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து கனகபுரம் வீதியூடாக டிப்போ சந்திக்குச் சென்று, [6 ஆம் பக்கம் பார்க்க]

## ஐ. நா. பொது செயலாளருக்கு வெகுஜன அமைப்பு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள் படும் துன்பங்கள் இப்போது அதிகரித்துள்ளது. தமிழ் மக்களை அரசு பட்டினி போட்டு மறைமுகமாகச் சாகடித்தும் நேரிடையாகக் கொலை செய்தும் இன அழிப்புச் செய்வதை மனித சமூகம் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருப்பது மனிதாபிமானமற்ற செயலாகும் என்று வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்டோர்ஸ் பூட்டோரிஸ் காலிக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெகுஜன அமைப்புகளின் ஒன்றியச் செயலாளர் சூ.சிறில் கையெழுத்திட்டிருக்கும் இந்த [6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளிடம் ஆயுதமுள்ளதை அறிவிக்காதோர்மீது வழக்கு

(கொழும்பு)

பகுதியில் தீவிரவாத நட

## மாநகர ஆணையாளர் ஆயரிடம் மகஜர் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

"நீங்கள் அடிக்கடி கேள்விப் படுகின்ற தர்மம், நீதி, நியாயம் என்ற அழகிய பதங்களின் அவலட்சணமான அநாகரிகமான உள்ளுருவங்களை யதார்த்தமாக எமது அவலங்களில் ஆயர் வணக்கத்துக்குரிய கென்னத் பெர்னாண்டோவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. யாழ். மாநகர சபை ஆணையாளர் வே. பொ.பாலசிங்கம் இம்மகஜரை ஆயரிடம்

விடங்களை நோக்கி குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற் கொண்டன.

எனினும் குண்டுகள் வெறும் வளவொன்றில் வீழ்ந்து

... அதிர்ச்சியினால் மரணமானார் என தெரியவருகின்றது.

நேற்று காலை 8.00 மணியளவில் திடீரென தென்ம

இக்குண்டுகள் அப்பகுதியில் அமைந்துள்ள மட்டுவில் யூனியன் பாடசாலையை அண்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# விரைவில் அறிக்கை வெளிவரும்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனி சமஷ்டி அமைப்பு முறையினை உருவாக்கும் தீர்வுத்திட்டம் ஒன்றை பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதித் தீர்வாக முன்வைக்கவுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

மேலும், பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கவுள்ள தீர்வுத்திட்டம், பேரளவில் சமஷ்டி அமைப்பு என இருப்பினும் இந்திய சமஷ்டி அமைப்பை ஒத்தது போன்ற அரை சமஷ்டி அமைப்பாகவே இருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை இவ் தனித் தனி மாகாணங்களுக்கான சமஷ்டி அமைப்பு முறையின் இறுதி நகல் திட்டம் வரையப்படுவதாகவும், விரைவில் இத்தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# அரச அடக்குமுறைக்கு எதிராக கிளிநொச்சியில் நேற்று பேரணி

(கிளிநொச்சி)

சிறிலங்கா இனவாத அரசின் முற்றுகைப் போர், திட்டமிட்ட கல்விச் சீர் குலைப்பு தென் தமிழீழத்தில் தொடர்ந்தும் செய்யப்படும் இனப் படுகொலைகள் மற்றும் கிளாலிக் கடல் பகுதியில் திட்டமிட்டு பொதுமக்கள் கொல்லப்பட்டமை, கிளாலியூடாகப் பயணம் செய்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைபோன்றவற்றைக் கண்டித்தும் இவற்றை எதிர்க்கும் முகமாக மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்றை வன்னி மாவட்ட வெகுஜன ஒன்றியத்தினால் நேற்று கிளிநொச்சியில் நடாத்தப்பட்டது.

பேரணியில் இருபதாயிரத்துக்கும் மேலான மக்கள் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது கலந்து கொண்டனர். ஆசிரியர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், விவசாயிகள் பொது மக்கள் போன்றோர் ஆயிரக் கணக்கில் ஊர்வலத்தில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இப் பேரணி கரடிப்போக்குத் தென்திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து கனகபுரம் வீதியூடாக டிப்போ சந்திக்குச் சென்று,

[6 ஆம் பக்கம் பார்க்க]

# சமஷ்டித் தீர்வுக்கு எதிராக பிரசாரம் ஆரம்பம்

[கொழும்பு]

சமஷ்டி அமைப்பு முறைக்கு எதிராக பௌத்த அமைப்புகளின் ஒன்றியம் தெற்கில் கூட்டங்களை நடாத்தி வருகின்றது. பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் வாயிலாக இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்படவுள்ள சமஷ்டி அமைப்பு முறையானது ஒன்றிணைந்த இலங்கைக்கு எத்தகைய குந்தகங்களை ஏற்படுத்தும் என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவே தெற்கில் பரவலாக இவ்வாறான கூட்டங்கள் தொடர்ச்சியாக நடாத்தப்படும் என உலகமகாசங்க சம்மேளனம் [பௌத்த அமைப்புகளின் ஒன்றியம்] இவ் ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக தெரியவருகிறது.

இத்தகைய கூட்டத்தொடரின் முதலாவது கூட்டம் கடந்த 10ஆம் திகதி பி. ப 3.00 மணிக்கு மெத கொட சுமண திஸ்ஸ தேரரின் தலைமையில் கம்பஹா சமவிகாரையில் நடைபெற்றது.

இவ்வமைப்பில் சிறிலங்கா ஐக்கிய பௌத்த மகா சம்மேளனம், தேசப் பிரேமி,

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# ஐ. நா. பொது செயலாளருக்கு வெகுஜன அமைப்பு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்கள் படும் துன்பங்கள் இப்போது அதிகரித்துள்ளது. தமிழ் மக்களை அரசு பட்டினி போட்டு மறைமுகமாகச் சாகடித்தும் நேரிடையாகச் கொலை செய்தும் இன அழிப்புச் செய்வதை மனித சமூகம் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருப்பது மனிதாபிமானமற்ற செயலாகும் என்று வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்டோர்ஸ் பூட்டோர்ஸ் காலிக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெகுஜன அமைப்புகளின் ஒன்றியச் செயலாளர் கு.சிறில் கையெழுத்திட்டிருக்கும் இந்த

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

# புலிகளிடம் ஆயுதமுள்ளதை அறிவிக்காதோர்மீது வழக்கு

(கொழும்பு)

புலிகள் இயக்கத்திற்குப் பல வகையில் உதவி புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஆறு தமிழ் இளைஞர்கள்மீது சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வெவ்வேறான வழக்குகளைத் தாக்கல்செய்துள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்திருக்கிறது.

முத்தன் வரதன் என்ற கொக்குவில் பகுதி இளைஞர் 1990இல் ஜனவரிக்கும், டிசம்பருக்கும் இடைப்பட்ட கால எல்லைக்குள் கொக்குவில் பகுதியில் தீவிரவாத நடவடிக்கைக்காகப் புலிகள் இயக்க அங்கத்தவர்களான ஜெக்சன், ஈசன் என்பவர்களுக்குப் பொருள்கள் வழங்கியதாகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சுமத்தப் பட்டுள்ளார்.

சின்னத்தம்பி மோகன் (கர்ணன் திருச்செல்வம்) என்பவருக்கு எதிராக 1-1-90க்கும் நவம்பர் 15க்கும் இடைப்பட்ட கால எல்லைக்குள் ஆனையிறவுப் பகுதியில் சட்டவிரோதமாகத் துப்பாக்கி, ஆயுதங்கள்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மாநகர ஆணையாளர் ஆயரிடம் மகஜர் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

"நீங்கள் அடிக்கடி கேள்விப்படுகின்ற தர்மம், நீதி, நியாயம் என்ற அழகிய பதங்களின் அவலட்சணமான அநாகரிகமான உள்ளுருவங்களை யதார்த்தமாக எமது அவலங்களில் இருந்து உங்களால் அடையாளம் காணமுடியும்" இவ்வாறு யாழ். மாநகரசபை நூலக மண்டபத்தில் நேற்று நடைபெற்ற வரவேற்பு வைபவத்தின் போது அங்கிலிக்கன் ஆயர் வணக்கத்துக்குரிய கெனத் பெர்னாண்டோவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. யாழ். மாநகர சபை ஆணையாளர் வே. பொ.பாலசிங்கம் இம்மகஜரை ஆயரிடம் கையளித்தார். இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

பண்பாட்டுக்கும் பாரம்பரியத்துக்கும் பெயர்பெற்ற சரித்

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

# குறைந்த விலையில் ரஷ்யக் ஹெலிகொப்டர்கள்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் ரஷ்யாவிடம் கூறுவிலைஇல்லாமல் மிகக்குறைந்த விலைக்கு எம். ஐ-8 ரக ஹெலிகொப்டர்களைக் கொள்வனவுசெய்திருக்கிறது எனக்கருதப்படுகின்றது.

ரஷ்யாவுடன் நேரடியாக எந்தவொரு வியாபாரமும் இலங்கை அரசு இதுவரை செய்யவில்லை. எனவேஹெலிகொப்டர்களையும் அப்படியே விற்பனைசெய்கின்றோம் என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரிவினோதசிலி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில், இலங்கையின் தேவையை நாம் ஜேர்மனிமூலம் கொள்வனவு செய்கிறோம். அதுபோலவே ரஷ்யப்பொருள்களை இலங்கை பிரிட்டனிடம் இருந்து கொள்வனவுசெய்கின்றது என்றார்.

இதனால்தான் ரஷ்ய நிறுவனம் ஒன்றுடன் இலங்கை அரசு விமானக் கொள்வனவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய முடியாமல் போனது. ரஷ்யாவிடம் இருந்து பெற்ற விமானங்களை சீனா இலங்கைக்கு விற்பனை செய்துவருவதாகத் தெரியவருகின்றது.

# கிளாலியில்காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் மரணம்

[வவுனியா]

கிளாலிக் கடலில் படகுகள் மீதான தாக்குதலில் படுகாயமடைந்து அனுராதபுரம்வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம்பெண் மரணமடைந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரண்டாம் திகதி கிளாலி கடற்பரப்பில் வைத்து மூன்று பயணிகள் படகு சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டு அதில் பயணம் செய்த முப்பதிற்கும் மேற்பட்ட பயணிகள் சுட்டும் வெட்டியும்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# மட்டக்களப்புக் கிராமங்கள் திடீர் திடீரென சுற்றிவளைப்பு

(வவுனியா)

மட்டக்களப்பு மாவட்ட கிராமப் புறங்கள் இராணுவத்தால் திடீர் திடீர் என்று சுற்றி வளைக்கப்படுவதோடு அப்பாவிப் பொது மக்களும் கைது செய்யப்படுகின்றனர்.

ஒரு வாரத்தில் இரு தடவைகள் கூட சில கிராமங்கள் சுற்றி வளைக்கப்படுகின்றன என்று அங்கிருந்து வந்த பெண் ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள செங்கலடி, மொரக்கொட்டாஞ்சேனை ஆகிய இடங்கள் அடிக்கடி இராணுவத்தின் சுற்றி வளைப்பிற்கு உட்படுத்தப்படுகின்றன. இங்கு நிரந்தரமாக வாழும் மக்கள் கூட இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டு முகமூடி அணிந்தவர்கள் முன் நிறுத்தப்படுகின்றனர். முகமூடி அணிந்தவர்களால் அடையாளங்காணப்படும் அப்பாவிகள் சிறையில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இச் சுற்றி வளைப்பு, தேடுதல் வேட்டைகளின் போது சிறிலங்கா இராணுவத்துக்கு உதவியாக ரெலோ குழுவினர் செயல்படுகின்றனர் என்று மேலும் அந்தப் பெண் விபரித்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# அங்கிலிக்கன் ஆயர்விஜயம் பேச்சுவார்த்தையின் அறிகுறி

ஏ. எவ். பி. செய்தியாளர் தெரிவிப்பு

வாரஇறுதியில் கொழும்பின் புதிய அங்கிலிங்கன் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்ததாக அரசு சார்புப் பத்திரிகையான டெயிலி நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த இரு பொலிசாரை புலிகள் விடுதலை செய்தது ஒரு நல்

[6-ம் பக்கம் பார்க்க]

# கைதாகிய இளைஞர் பற்றி விபரம் தெரியவில்லை

(வவுனியா)

பாலமோட்டை பகுதியில் உள்ள 'இருபத்தொன்பது' என்ற இடத்தில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தமிழரின் நிலை பற்றி அறிய உறவினர்கள் அலைகின்ற போதிலும் உண்மை நிலை தெரியவரவில்லை.

கடந்த 4ஆம் திகதி இப்பகுதியில் வைத்து பாவற்குளம் நான்காம்படிவத்தைச்சேர்ந்த இராமச்சந்திரன் என்பவர் கைது செய்து கொண்டு செல்லப்பட்டார்.

இதுவரையில் இவரின் நிலை பற்றி அறியப்படவில்லை, (தி)

# ஆயருக்கு நன்றி

யாழ்ப்பாணத்திற்கு சென்ற ஆங்கில திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோவும் கலாநிதி மியான்சி பெரேரா

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு. DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (இ-5679)


## சம்பள உயர்வு

அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் கடந்த முதலாம் திகதி முதல் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த பட்ஜட்டில் அரச ஊழியர்களுக்கு 30 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட்டிருந்த போதிலும் 1993 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் சம்பள மீளாய்வின்படி உயர் தரப்பினருக்கு 37 சதவீதமும், குறைந்த தரப்பினருக்கு 40 சதவீதமும் ஆகக் குறைந்த சம்பள உயர்வாக வழங்கப்படவுள்ளது.

## சமஷ்டி என்பதற்கு பதில் துட்டகைமுனு முறை எனலாம்

### - காமினி பொன்சேகா

(கொழும்பு)

சமஷ்டி என்ற வார்த்தைக்குப் பதிலாக துட்டகைமுனு முறை என்று அழைத்தால் பௌத்த குருமார் இதனை ஏற்றுக் கொள்வார்கள் அல்லவா? என்று பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா தெரிவித்தார். மாத்தறை நகரில் கடந்த புதனன்று நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில்;

சமஷ்டி என்ற வார்த்தையைக் கேட்டதுமே பலர் வியந்துவிடுகிறார்கள். பௌத்த மதகுருமார் கூட நடக்காதது ஒன்று நடக்கப் போகிறது என்று அதிர்ச்சி அடைந்துவிடுகிறார்கள். இந்த நாட்டில் முதன் முதலில் சமஷ்டி முறையை அறிமுகப்படுத்தியவர் துட்டகைமுனு மன்னர் தான் என்பதை இன்று சமஷ்டியை எதிர்க்கும் பலரும் ஏன் ஏற்க மறுக்கின்றனர்.

## பிரச்சினையை எதிர்நோக்க தயாராகவே இருக்கிறேன்

### அங்கிலிக்கன் ஆயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தென்னிலங்கையில் எடுத்துக் கூறும் போது நான் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி வரும். என்றாலும் எனது பணியை செய்வேன். அடக்கப்பட்ட மக்களின் நிலையை வெளி உலகிற்கு உணர்த்துவேன் இவ்வாறு அண்மையில் யாழ் முத்திரைச்சந்திசவேரியார் ஆலயத்தில் நடைபெற்ற நல்லாராதனையில் யாழ் வந்துள்ள அங்கிலிக்கன் ஆயர் அதி வண. கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், யாழ்ப்பாண மக்கள் மிக எளிமையான வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். ஆனால் கொழும்பில் ஆயிரக்கணக்கான மக்கள் வீணாக பணத்தை செலவிடுகிறார்கள் நீங்கள் படும் வேதனைகள் மிக விரைவில் தீரும் என்று நம்பிக்கை தெரிவித்ததுடன் இதற்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன் என்று உறுதியும் அளித்தார்.

## தற்கொலை

(வடமராட்சி)

மனவிரக்தி காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் கடந்தஞாயிற்றுக்கிழமை நஞ்சருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

வியாபாரி மூலையைச் சேர்ந்த ந. கதிர்காமநாதன் (வயது 52) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவர். (யோ)

## மகர ஜோதி

வண்ணார்பண்ணை சிறி ஹரி ஹர புத்திர ஐயனார் ஆலயத்தில் தைப்பொங்கலன்று மகரஜோதி உற்சவம் நடைபெறவுள்ளது. மாலை ஐந்து மணி தொடக்கம் இவ் உற்சவம் நடைபெறும்.

## சிறிலங்கா படையில் பெண்கள் அதிரடிப் பிரிவு

சிறிலங்கா விசேடபெண்கள் அதிரடிப் படை ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக கூட்டுப் படைத் தலைமையக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறிலங்காப் படைகளில் பொலிஸ் பிரிவில் இவ் விசேட பெண்கள் அதிரடிப்படை ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளதாகவும் விசேட அதிரடிப் படையினரின் நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்கவும் பரவலாக்கவும் இந்தப் பெண்கள் அணி அமைப்பதன் மூலம் நிறைவேற்றப்படும் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கொள்ளையில் ஈடுபட்ட தப்பியோடிய ராணுவத்தினரும் பொலிசாரும் மோதல்

இராணுவத்தில் கடமையாற்றி தப்பிவந்த ஐந்து பேர் எம்பிலிப்பிட்டிய பகுதிகளில் கொள்ளையடித்து வருவதாக தெரிய வந்ததையடுத்து பொலிசார் அவர்களைக் கைது செய்ய முயன்ற போது இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

எம்பிலிப்பிட்டிய நகருக்கு வந்த இக் கோஷ்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் ஆட்டோ வண்டியை வாடகைக்கு அமர்த்தி சந்திரிகாவெவ பகுதிக்கு சென்றுள்ளார். அங்கு சாரதியை தாக்கி பணத்தையும் பறித்து ஆட்டோவையும் கடத்திச் செல்ல முற்பட்ட சமயம் சாரதி காட்டினுள் ஓட முயன்ற போது அவரை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

ஊர் மக்கள் இதையறிந்து பொலிசாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து பொலிசாரும் பொதுமக்களும் சேர்ந்து காட்டில் தேடுதல் நடத்தும் போது கொள்ளையர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை இடம் பெற்றது.

காயமடைந்த சாரதி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக

## ஈழநாதம் 3-ம் ஆண்டு நிறைவு

### போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் மூன்றாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப்படப் போட்டி [Cartoon], கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பவைவற்றை நடாத்த முன் வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

- கருத்துப் படங்கள் [Cartoon]
- சிறுகதை
- கவிதை

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும.


★ கருத்துப் படங்கள் 15 செ.மீ X12 செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.


## COMPUTER TECHNOLOGY

புதிய பிரிவு ஆரம்பம் :
16-01-93 (சனி)

**UNIKCO**
COMPUTER CENTRE
JAFFNA
(வெலிங்டன் சந்திக்கருகாமையில்)



(இ-5765)


## நினைவு கூருகின்றோம்

### 1993-01-13

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை - தம்பலகமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்

1987 ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து தமிழீழம் வரும்போது தமிழீழக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

பண்டிதர் [திருக்கோணமலை]

கோவிந்தன் [ — தயாபரன் - நிலாவெளி - திருக்கோணமலை]

ஜஸ்ரின் [சந்தனம் செல்வராசா - 6-ம் கட்டை; சாம்பல் தீவு - திருக்கோணமலை]

வேதமணி [அப்புச்சாமி சிவலிங்கம் - இசங்கன்குளம் ஆண்டாங்குளம் - மன்னார்]

2-ம் லெப். மகேந்திரன் [செட்டிகுளம்-வவுனியா]

கிறிஸ்ரி [கிளிநொச்சி]

ஜோய் [செபஸ்தியாம்பிள்ளை அல்பிரட் ஜோசெப் - 41/2, ஓடக்கரை வீதி, குருநகர்-யாழ்ப்பாணம்]

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்ட வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1989 ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். ஜெசி [சிவலிங்கம் ரவீந்திரன் - பாவற்குளம் - வவுனியா]

யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு - சீமெந்து வீதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளந்தாய், பெண் குழந்தை, மற்றுமொரு சிறுமி.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ்ப் பெண் - சுட்டுக் கொல்லப்பட்ட இளம் பெண் இளைஞன் உட்பட - ஏறாவூர், மயிலம்பாவெளி பகுதிகளைச் சேர்ந்த 5 தமிழர்கள்.

ந்த ந கதிர்காமநாதன் (வயது 52) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவர். (யோ)

...ஐந்து மணி தொடக்கம் இவ் உற்சவம் நடைபெறும்.

...இற்கு உணர்த்துவேன் இவ்வாறு அண்மையில் யாழ் மூத்திவைரச்சந்திசவேரியார் ஆலயத்தில் நடைபெற்ற நல்லாராதனையில் யாழ் வந்துள்ள அங்லிலிக்கன் ஆயர் அதி வண.

நீங்கள் படும் வேதனைகள் மிக விரைவில் தீரும் என்று நம்பிக்கை தெரிவித்ததுடன் இதற்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன் என்று உறுதியும் அளித்தார்.

# ஈழநாதம்
# 3-ம் ஆண்டு நிறைவு

## போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் மூன்றாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப்படப் போட்டி [Cartoon], கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பவைவற்றை நடாத்த முன் வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

- கருத்துப் படங்கள் [Cartoon]
- சிறுகதை
- கவிதை

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15 செ.மீ X12 செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்,

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதுடன், பிந்திக்கிடைப்பவை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது'

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1993 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.
மூன்றாவது ஆண்டு நிறைவு விழா போட்டியில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத்தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும் முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு மூன்றாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' ஆண்டு நிறைவுப் போட்டி என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு.

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## சிறிலங்கா படையில் பெண்கள் அதிரடிப் பிரிவு

சிறிலங்கா விசேடபெண்கள் அதிரடிப் படை ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக கூட்டுப் படைத் தலைமையக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறிலங்காப் படைகளின் பொலிஸ் பிரிவில் இவ் விசேட பெண்கள் அதிரடிப்படை ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளதாகவும் விசேட அதிரடிப் படையினரின் நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்கவும் பரவலாக்கவும் இந்தப் பெண்கள் அணி அமைப்பதன் மூலம் நிறைவேற்றப்படும் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கொள்ளையில் ஈடுபட்ட தப்பிஓடிய ராணுவத்தினரும் பொலிசாரும் மோதல்

இராணுவத்தில் கடமையாற்றி தப்பிவந்த ஐந்து பேர் எம்பிலிப்பிட்டிய பகுதிகளில் கொள்ளையடித்து வருவதாக தெரிய வந்ததையடுத்து பொலிசார் அவர்களைக் கைது செய்ய முயன்ற போது இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

எம்பிலிப்பிட்டிய நகருக்கு வந்த இக் கோஷ்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் ஆட்டோ வண்டியை வாடகைக்கு அமர்த்தி சந்திரிகாவெவ பகுதிக்கு சென்றுள்ளார். அங்கு சாரதியை தாக்கி பணத்தையும் பறித்து ஆட்டோவையும் கடத்திச் செல்ல முற்பட்ட சமயம் சாரதி காட்டினுள் ஓட முயன்ற போது அவரை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

ஊர் மக்கள் இதையறிந்து பொலிசாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து பொலிசாரும் பொதுமக்களும் சேர்ந்து காட்டில் தேடுதல் நடத்தும் போது கொள்ளையர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை இடம் பெற்றது.

காயமடைந்த சாரதி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். கொள்ளையர் அனைவரும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுவதுடன், பொலிஸ் அத்தியட்சகரின்பணிப்பின் பேரில் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் விசாரணையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது

Postgraduate Diploma in English and Diploma in English 1991/92

**ADMISSION TEST**

The Admission Test for the above courses will be held on 1993 - 01 - 16 at 9.00 a. m. in the Ramanathan Hall University of Jaffna (Not on 1993-01-15 as scheduled)

The list of names of selected students for the Admission Test is displayed in the University Notice Board

Please obtain the admission card from the Examination Branch, University of Jaffna.

Registrar
University of Jaffna.
1993 - 01 - 11

(சி-5759)

## 1993-01-13

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை - தம்பலகமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்

1987 ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து தமிழீழம் வரும்போது தமிழீழக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

பண்டிதர் [திருக்கோணமலை]

கோவிந்தன் [ — தயாபரன் - நிலாவெளி - திருக்கோணமலை]

ஜஸ்ரின் [சந்தனம் செல்வராசா - 6-ம் கட்டை; சாம்பல் தீவு - திருக்கோணமலை]

வேதமணி [அப்புச்சாமி சிவலிங்கம் - இசங்கன்குளம் ஆண்டாங்குளம் - மன்னார்]

2-ம் லெப். மகேந்திரன் [செட்டிகுளம்-வவுனியா]

கிறிஸ்ரி [கிளிநொச்சி]

ஜோய் [செபஸ்தியாம்பிள்ளை அல்பிரட் ஜோசெப் - 41/2, ஓடக்கரை வீதி, குருநகர்-யாழ்ப்பாணம்]

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்ட வட்டுக்கோட்டை இழக்கைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1989 ஆம் ஆண்டு வவுனியா - மன்னார் வீதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். ஜெசி [சிவலிங்கம் ரவீந்திரன் - பாவற்குளம் - வவுனியா]

யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு - சீமெலை வீதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளந் தாய், பெண் குழந்தை, மற்றுமொரு சிறுமி.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ்ப் பெண் - சுட்டுக் கொல்லப்பட்ட இளம் பெண் இளைஞன் உட்பட - ஏறாவூர், மயிலம்பாவெளி பகுதிகளைச் சேர்ந்த 5 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
[சி-5757]

உ

## திருமண வைபவம்

அன்புடையீர்,
கடந்த 28 - 11 - 1992 சனிக்கிழமை பிற்பகல் 5-00 — 6-00 மணிவரை உள்ள சுபமுகூர்த்தத்தில்

| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**ஸ்ரீகாந்தன்**<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**நந்தினி**<br>அவர்களுக்கும் |
|---|---|

எல்லாம் வல்ல முருகப் பெருமான் இருபையால் லண்டன், 200 A, ஆர்ச்வே றோட், ஹைகேட் ஸ்ரீ முருகன் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமணம் இனிது நிறைவேறியது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்,

திரு. திருமதி சபாரட்ணம்,
சுந்தரோடை,
சுன்னாகம்.

திரு. திருமதி சற்குணநாதன்,
"பிருந்தாவனம்"
மீசாலை தெற்கு,
மீசாலை.

(3371)

நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்

# பாரிய படை நடவடிக்கைக்கு அரசு தயாராகி வருகிறது

## கொழும்பு பத்திரிகை தகவல்

(கொழும்பு) இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசியல்தீர்வுகாண சிறிலங்கா அரசாங்கம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சில முயற்சிகளை மேற்கொண்டதாகவும் அவை பயனளிக்காததனால் இம்மாத இறுதியில் வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு புலிகளை அரசியல் தீர்வுக்கு நிர்ப்பந்திக்க சிறிலங்கா அரச நடவடிக்கை எடுத்துவருவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது:

யாழ். குடா நாட்டின் மீது படை எடுப்பை நடாத்துவதற்கு முன்னோடியாக வடபகுதியில் பெருமளவு ஆயுதங்களும் படையினரும் குவிக்கப்பட்டு வருவதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அண்மையில் ஹமீத் வெளிநாடொன்றுக்குச் சென்று புலிகள் பிரதிநிதியுடன் நடாத்திய பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை எனவும் மங்கள முனசிங்காவின் தெரிவுக் குழு வெற்றியளிக்க வில்லை என்பதாலும் இந் நடவடிக்கைக்கு திட்டமிடப் படுவதாக அப் பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

இந் நடவடிக்கைக்காக கூட்டுப்படை தலைமை அலுவலகம் அநுராதபுரத்திற்கு மாற்றப்படவுள்ளதாகவும் இதுவரை காலமும் அநுராதபுரத்தில் இயங்கிவந்த இராணுவ இரண்டாம் பிரிவின் தலைமை அலுவலகம் வவுனியாவுக்கு மாற்றப்பட்ட பின் இம்மாற்றம் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 27 | 19 |
| — | — |
| 05 | 08 |
| — | — |
| 1973 | 1992 |



அமரர்

### இராசதுரை திவாகரமூர்த்தி

19. 8. 92-ல் பிரான்சில் அகாலமரணம் அடைந்த ஆவரங்கால் மேற்கு புத்தூரைச் சேர்ந்தவரும், வலிகிழக்கு வடபகுதி பல நோ. கூ. சங்கத்தின் காசாளராக கடமையாற்றும் திரு. திருமதி இராசதுரை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் இராசதுரை திவாகரமூர்த்தி அவர்களின் 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியமும் மதிய போசன உபசாரமும் 13. 1. 93 இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்த வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

திரு. திருமதி
இராசதுரை குடும்பத்தினர்

(3952)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 08 | |
| — | — |
| 08 | 14 |
| — | — |
| 1914 | 12 |
| | — |
| | 1992 |



### சதாசிவம் பாலாமணி

திதி: 13 – 01 – 1993

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாசவிளக்காய் பலரும் மதிக்க வாழ்ந்திட்ட எங்கள் அன்புத்தாயே! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு எங்குதான் சென்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

181, அரசடி வீதி,
நல்லூர்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(3988)

---

# இருபத்தேழாம் அகவையை இன்று எட்டியிருப்பாய்



## மேஜர் அழகன்

## (செல்வராசா இளங்கோ)



அமரர்

## இராசதுரை திவாகரமூர்த்தி

19. 8. 92-ல் பிரான்சில் அகாலமரணம் அடைந்த ஆவரங்கால் மேற்கு புத்தூரைச் சேர்ந்தவரும், வலிகாமம் கிழக்கு வடபகுதி பல நோ. கூ. சங்கத்தின் காசாளராக கடமையாற்றும் திரு. திருமதி இராசதுரை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் இராசதுரை திவாகரமூர்த்தி அவர்களின் 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியமும் மதிய போசன உபசாரமும் 13. 1. 93 இன்று புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந்த வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

திரு. திருமதி
(3952) இராசதுரை குடும்பத்தினர்

விக்கவில்லை எனவும் மங்கள முனசிங்காவின் தெரிவுக் குழு வெற்றியளிக்க வில்லை என்பதாலும் இந் நடவடிக்கைக்கு திட்டமிடப் படுவதாக அப் பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

இந் நடவடிக்கைக்காக கூட்டுப்படை தலைமை அலுவலகம் அநுராதபுரத்திற்கு மாற்றப்படவுள்ளதாகவும் இது வரை காலமும் அநுராதபுரத்தில் இயங்கிவந்த இராணுவ இரண்டாம் பிரிவின் தலைமை அலுவலகம் வவுனியாவுக்கு மாற்றப்பட்ட பின் இம்மாற்றம் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சதாசிவம் பாலாமணி

திதி: 13 - 01 - 1993

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாசவிளக்காய் பலரும் மதிக்க வாழ்ந்திட்ட எங்கள் அன்புத்தாயே! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு எங்கு தான் சென்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

181, அரசடி வீதி,
நல்லூர்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(3988)

# இருபத்தேழாம் அகவையை இன்று எட்டியிருப்பாய்



## மேஜர் அழகன்

### (செல்வராசா இளங்கோ)

தாயின் மடியில்:
13 - 01 - 1966

தாயக விடிவில்
29 - 06 - 1992

எம் தாயகத்தின் ஈனநிலையை
இல்லாது ஒழிக்க எழுந்த
இம் மானத் தமிழ் மறவன்
இல்லை இன்று எம்மிடையே-ஆனாலும்
அவனின் பூப்போன்ற சிரிப்பும்
போர்முகத்துச் சாதனையும்
அவனியிலே வாழும் அதனாலே-இவன்
சாவிழுங்கிய சரித்திரமல்ல

- ஈழநாதம் பணியாளர்கள்

# இளாலி படகுப் படுகொலைகள் சிங்கள அரசிற்கு தெரியாதாம்

-செய்தியாளரிடம் ராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளாலிக்கடற்பரப்பில்பதின்னான்கு அப்பாவிப் பொது மக்கள் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து தனக்கு ஒன்றும் தெரியாது என்று கொழும்பு கிராமோதய மண்டபத்தில் கடந்த வியாழன்று இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது பிரிகேடியர் அங்கமௌ தெரிவித்தார்.

கேள்வி: கடல் நீர் ஏரியைக் கடக்க முயன்ற பொதுமக்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பதின்னான்கு பேர் கொல்லப்பட்டதை நீங்கள் அறிவீர்களா?

பதில்: அது பற்றி எனக்குத் தெரியாது.

கேள்வி: கொலையுண்டவர்களில் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வி அதிகாரியும் ஒருவர்.

பதில்; அவர் புலிகளால் கொலை செய்யப்பட்டதாகக் கேள்விப்பட்டேன்.

கேள்வி: கல்வி அதிகாரி கடல் நீர் ஏரியில் புலிகளால் கொலை செய்யப்பட்டாரா?

பதில்: இல்லை. அவர் கிளிநொச்சியில் கொலை செய்யப்பட்டார். கடற்படை, கடல் நீர் ஏரியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது சில சமயங்களில் கடற்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுகிறது. அவர்கள் மீது சுடும்போது, அவர்கள் சும்மா பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? கடல் நீர் ஏரி தடை செய்யப்பட்ட பிரதேசம். அதில் பயணம் செய்பவர்கள் சுடப்படுவார்கள்.

அமைச்சரவைப்பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா:

கடற்படை கண்டதும் சுடலாம். இதில் புதிதாக ஒன்றும் இல்லை கடல் நீர் ஏரி தடை செய்யப்பட்ட பிரதேசம். பொதுமக்கள் இது குறித்து முன்பே எச்சரிக்கப்பட்டுள்ளார்கள். பல முறை எச்சரிக்கப்பட்டுள்ளது. எச்சரிக்கையை மீறுபவர்கள் சுடப்படத்தான் செய்வார்கள். இக்கடற்பரப்பில் மீன்பிடித் தொழில் செய்ய முடியாதிருக்கும் மீனவர்களுக்குநிவாரணம் வழங்கும்படி யாழ். அரச அதிபர் கடந்த முறை கொழும்பு வந்தபோது கேட்டிருந்தார்.

கேள்வி: அப்படியானால் கடல் நீர் ஏரியில்பயணம் மேற்கொள்வது சட்டவிரோதமான செயலா?

பிரிகேடியர் அங்கமௌ;

ஆம் அது ஒரு குற்றச் செயலாகும்.

கேள்வி: கடற்படை சுட்டுக் கொன்றபதின்னான்குபேரைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது. அப்படித்தானே?

பதில்: தெரியாது. ஏற்கனவே சொன்னது போல் கல்வி அதிகாரி புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதை மாத்திரம் அறிவேன். பொதுமக்களை நாம் சுடவில்லை. சில சமயம் பொதுமக்கள் துப்பாக்கிச் சமரில் மாட்டுப்பட்டு இறந்திருக்கலாம்.

கேள்வி: கடல் நீர் ஏரியைக் கடப்பவர்கள் சுடப்படுவார்கள் என முன்பு எச்சரிக்கப் பட்டதா?

பதில்: ஆம். சென்ற வருடம் நாம் எச்சரித்திருந்தோம். உண்மையில் பல தடவைகள் எச்சரித்துள்ளோம். வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டது.

கேள்வி; கடல் நீர் ஏரியைக் கடப்பது ஒரு தண்டனைக்குரிய குற்றச் செயல்' என்று தான் உங்கள் அறிவிப்புக் கூறுகிறது. சுடப் படுவார்கள் என்று தெரியப்படுத்தவில்லை.—

பதில்: கடல் நீர் ஏரியை உபயோகிப்பது தண்டனைக்குரிய குற்றச் செயல். அதனை உபயோகிப்பவர்கள் சுடப்படலாம்.

கேள்வி: கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் போக இருக்கிறார்.

பதில்; அவருடன் தனிப்பட்ட முறையில் நான் தொடர்பு கொண்டு அந்தப் பாதையில் (கடல் நீர் ஏரி) பிரயாணம் செய்ய வேண்டாம் என்று சொல்லியிருந்தேன்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா:

கிளாலி கடல் நீர் ஏரி ஒரு பிரச்சினைக்குரிய பகுதி என்று ஆயருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கேள்வி: ஆயரும் கூட சுடுபட்டிருக்கலாம?

பதில்; ஆயரைச் சுடுவதென்ற கேள்விக்கே இடமில்லை. நிலைமைகள் அவருக்கு விளக்கப்பட்டது. இக்கடற்பரப்பில் இராணுவ நடவடிக்கை நடைபெறுவதாக அவருக்குத் தெரிவித்தோம். கூட்டுப் படைத் தலைமைச் செயலகம்அவருக்கு இதனைக்கூறியிருந்தது. ஆயர் கிளிநொச்சி வரை பயணம் போவதாகச் சொன்னார்.

கேள்வி; கடற்படைசுட்டதில் பதின்னான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஐந்து பேர் காயமடைந்தனர். இது பற்றி உங்களுக்குத் தகவல் எட்டியதா?

பிரிகேடியர் அங்கமௌ;

உறுதியளிக்கப்பட்ட தகவல்கள் எதுவும் எனக்குக்கிடைக்கவில்லை.

கேள்வி; இது சம்பந்தமான விசாரணைகள் நடைபெறுகின்றனவா?

பதில்; ஆம். விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## கபடத்தனமான முறையில் அரசு புலிகளுடன் பேச்சு

-மகிந்த ராஜபக்ஷ கண்டனம்

(கொழும்பு)

எதிர்வரும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பாதயாத்திரையின்போது தேசியப் பிரச்சினையில் அரசின் நிலைப்பாடு மற்றும் புலிகளுடன் அரசு நடத்திய பேச்சு வார்த்தை குறித்தும் கேள்விகள் எழுப்பப்படவுள்ளன என்று சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கபடத்தனமான முறையில் அரசு புலிகளுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது என்றும், தொடர்ந்து நடைபெற்று வரும் யுத்தத்தினால் நாடு அனுபவித்து வரும் கஷ்டங்கள் மக்கள்முன் வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தப் பாதயாத்திரையில் கலந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிவித்த அவர் பொதுமக்கள், பத்திரிகையாளர். பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது பொலிஸ் மேற்கொண்டுவரும் தாக்குதல் சம்பந்தமாக இம்முறை நடக்கவிருக்கும் பாதயாத்திரையில் அழுத்தம் தரப்படும் என்றார்.

பல எதிர்க்கட்சிகள் பாதயாத்திரையில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

## சுற்றிவளைப்பு தேடுதலில்

## நூல் நிலையம் நிர்மாணிப்பு

(குருநகர்)

யாழ். முன்னாள் ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் மும்முடி விழாவின் போது அவர்களால் யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடு நிலையத்தில் திறந்து வைக்கப்பட்ட அறிவியல் நூலகத்திற்கு புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

யாழ். மத்தியூஸ் வீதியில் தியோகுப்பிள்ளை அவனியூவில் அமைந்துள்ள நடுநிலைய காரியாலயத்துக்கு அருகே மூன்று லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நூல் நிலையம் பலரது மனதையும் கவர்வதாக அமைந்துள்ளது. (21)

## ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸை இடைமறித்து கொள்ளை

- கொழும்பில் சம்பவம்

ஓடும் பஸ்ஸை நிறுத்தி இரு வியாபாரிகளிடமிருந்து 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3. 50 மணியளவில் கொழும்பு கிராண்ட்பாஸில் இடம்பெற்றதாக கொழும்பு பத்திரிகை மூலம் தெரியவருகிறது.

புத்தளம் செல்வதற்காக இரு வர்த்தகர்கள் புறக்கோட்டையில் பஸ் ஏறினர். அவர்கள் இருவரினதும் பணம் ஒரே பிரீவ்கேசில் வைக்கப்பட்டிருந்தது. இதேபஸ்ஸில் நாலு பேர் பயணிகள் போல் ஏறி பஸ் பிரின்ஸ் ஒப்வேல்ஸ் வந்த போது ஒருவர் எழுந்து தனது பாக் ஒன்றை புறக்கோட்டையில் விட்டு விட்டதாகவும், பஸ்ஸை நிற்பாட்டுமாறும் கோரினாராம். பஸ் நின்றதும் மற்ற மூவரும் துப்பாக்கியுடன் பயணிகளையும் சாரதியையும் அச்சுறுத்தி பஸ்ஸை நிறுத்துமாறு கோரியவர் வியாபாரிகள் இருந்த இருக்கைக்கு வந்து அவர்களிடமிருந்த பிரீவ்கேஸை பறித்து நால்வரும் இறங்கி ஓடித் தப்பிவிட்டனர்.

இது பற்றி தகவல் கிடைத்ததும் கிராண்ட்பாஸ் பொலிசார் செயலில் இறங்கி இருவரைப் பிடித்து அவர்களிடமிருந்து 2 லட்சம் ரூபாவை மீட்டனர். இவ்வாறு அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# மிதுதி 'புக்காரா' விமானங்கள் இரு மாதங்களில் வரும்

ஆர்ஜன்ரீனாவிலிருந்து சிறிலங்கா விமானப்படை கொள்வனவு செய்த எவ் ஏ எம். ஏ. 58 ஏ. ரக புக்காரா விமானங்களில் மிகுதியாக வரவுள்ள மூன்று புக்காரா விமானங்களும் இன்னும் இரண்டு மாதங்களில் கொழும்பு வந்தடையும் என அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன, இதேகாலப் பகுதியில் மூன்று எம். ஐ — 8 ரக ரஷ்ய தயாரிப்பு ஹெலிக்கொப்டர்களும் வந்தடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

முதல் புக்காரா விமானம் பாகங்களாகக் களற்றப்பட்டு போக்குவரத்து விமானத்தில் இம்மாத ஆரம்பத்தில் கொழும்புக்குக் கொண்டுவரப் பட்டது தெரிந்ததே.

## பட்டப்பகலில் நுகேகொடையில் கொள்ளை

[கொழும்பு]

நுகேகொடையில் பட்டப் பகலில் துப்பாக்கி முனையில் சென்று டாக்டர் ஒருவரின் வீட்டில் ஒரு இலட்சம் ரூபா பணமும், நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டு. கொள்ளையர்கள் டாக்டரின் காரிலேயே தப்பிச் சென்றுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் நுகேகொடையில் வசிக்கும் டாக்டர் ஏ எஸ். டி. சில்வாவின் வீட்டுக்கு ஆயுதபாணிகளாகச் சென்ற 3 பேர் பன்னல் வழியாக நிதி சேகரிக்கும் பட்டியல் ஒன்றைக் காண்பித்து நிதி கேட்க, டாக்டர் கதவைத் திறந்து அவர்களை உள்ளே அழைத்து பட்டியலை வாங்கிப் பார்க்கவே ஒருவர் ரிவால்வரையும், மற்றவர் கத்தியையும் காண்பித்து டாக்டரை ஒரு அறைக்குள் பூட்டினர்.

பின்னர் அவரது மனைவியிடம் சென்று அலுமாரியைத் திறக்க வைத்து 100000 ரூபா பணத்தையும், நகைகளையும் அபகரித்துக் கொண்டு அவருடைய காரிலேயே தப்பிச் சென்றனர். கார் மாலையில் சிறிது தொலைவில் கைவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விரைவில் நட்டஈடு கிடைக்கலாம்

(கொழும்பு)

வளைகுடா யுத்தத்தினால் தொழில் இழந்து நாடு திரும்பிய இலங்கையருக்கான நட்டஈடுகள் விரைவில் வழங்கப்படவுள்ளது ஆகக்குறைந்தது இரண்டு லட்சம் ரூபா தொடக்கம் இந்த நட்டஈடு வழங்கப்பட விருப்பதாகவும், 84,000 இலங்கையர் இதனால் பயனடைய இருப்பதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக ஆராய்வதற்காக மார்ச் மாதமளவில் ஒரு உயர்மட்ட தூதுக்குழு கொழும்பு வரவுள்ளது.

# 197 ஆம் நாள் நினைவுநாளும் 27வது பிறந்த நாளும்



கேள்விப்பட்டேன்.
கேள்வி: கல்வி அதிகாரி கடல் நீர் ஏரியில் புலிகளால்கொலை செய்யப்பட்டாரா?
பதில்: இல்லை. அவர் கிளிநொச்சியில் கொலை செய்யப்பட்டார். கடற்படை கடல் நீர் ஏரியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது சில சமயங்களில் கடற்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுகிறது. அவர்கள் மீது சுடும்போது, அவர்கள் சும்மா பார்த்துக் கொண்டிரு

சொல்வது சட்டவிரோதமான செயலா?
பிரிகேடியர் அங்கமௌ; ஆம் அது ஒரு குற்றச் செயலாகும்.
கேள்வி: கடற்படை சுட்டுக் கொன்றபதின்னான்கு பேரைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது. அப்படித்தானே?
பதில்: தெரியாது. ஏற்கனவே சொன்னது போல் கல்வி அதிகாரி புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதை மாத்திரம் அறிவேன். பொதுமக

கேள்வி: கொழும்பு [illegible] கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் போக இருக்கிறார்.
பதில்; அவருடன் தனிப்பட்ட முறையில் நான் தொடர்பு கொண்டு அந்தப் பாதையில் (கடல் நீர் ஏரி) பிரயாணம் செய்ய வேண்டாம் என்று சொல்லியிருந்தேன்.
அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா:
கிளாலி கடல் நீர் ஏரி ஒரு பிரச்சினைக்குரிய பகுதி என்று ஆயருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.
கேள்வி: ஆயரும் கூட சுடுபட்டிருக்கலாம?
பதில்; ஆயரைச் சுடுவதென்ற கேள்விக்கே இடமில்லை. நிலைமைகள் அவருக்கு விளக்கப்பட்டது. இக்கடற்பரப்பில் இராணுவ நடவடிக்கை நடைபெறுவதாக அவருக்குத் தெரிவித்தோம். கூட்டுப் படைத் தலைமைச் செயலகம் அவருக்கு இதனைக்கூறியிருந்தது. ஆயர் கிளிநொச்சி வரை பயணம் போவதாகச் சொன்னார்.
கேள்வி; கடற்படை சுட்டதில் பதின்னான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஐந்து பேர் காயமடைந்தனர். இது பற்றி உங்களுக்குத் தகவல் எட்டியதா?
பிரிகேடியர் அங்கமௌ; உறுதியளிக்கப்பட்ட தகவல்கள் எதுவும் எனக்குக்கிடைக்கவில்லை.
கேள்வி; இது சம்பந்தமான விசாரணைகள் நடைபெறுகின்றனவா?
பதில்; ஆம். விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

58 ஏ. [illegible] புக்காரா விமானங்களில் மிகுதியாக வரவுள்ள மூன்று புக்காரா விமானங்களும் இன்னும் இரண்டு மாதங்

எம். ஐ — 8 ரக ரஷ்ய தயாரிப்பு ஹெலிக்கொப்டர்களும் வந்தடையும் என எதிர்பார்க்

இம்மாத ஆரம்பத்தில் கொழும்புக்குக் கொண்டுவரப் பட்டது தெரிந்ததே.

# கபடத்தனமான முறையில் அரசு புலிகளுடன் பேச்சு

## -மகிந்த ராஜபக்ஷ கண்டனம்

(கொழும்பு)

எதிர்வரும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பாதயாத்திரையின்போது தேசியப் பிரச்சினையில் அரசின் நிலைப்பாடு மற்றும் புலிகளுடன் அரசு நடத்திய பேச்சு வார்த்தை குறித்தும் கேள்விகள் எழுப்பப்படவுள்ளன என்று சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கபடத்தனமான முறையில் அரசு புலிகளுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது என்றும், தொடர்ந்து நடைபெற்று வரும் யுத்தத்தினால் நாடு அனுபவித்து வரும் கஷ்டங்கள் மக்கள்முன் வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தப் பாதயாத்திரையில் கலந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிவித்த அவர் பொதுமக்கள், பத்திரிகையாளர். பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது பொலிஸ் மேற்கொண்டுவரும் தாக்குதல் சம்பந்தமாக இம்முறை நடக்கவிருக்கும் பாதயாத்திரையில் அழுத்தம் தரப்படும் என்றார்.

பல எதிர்க்கட்சிகள் பாதயாத்திரையில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

# சுற்றிவளைப்பு தேடுதலில் புதுக்குடியிருப்பில் 12 பேர் கைது

ஆரையம்பதிக்கு அருகே புதுக்குடியிருப்பு கிராமத்தில் கடந்த புதனன்று அதிகாலை இராணுவத்தினராலும், பொலிசாராலும் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தி 12பேர் கைது செய்யப்பட்டு ஆரையம்பதி முகாமுக்கு விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதே வேளை கடந்த திங்களன்று படையினர் தேடுதல் நடத்தியதில் களுவாஞ்சிக்குடியில் தும்பங்கேணி கிராமத்தில் வைக்கோல் கொள்வனவு நிலைய முகாமையாளர் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# புலனாய்வுத்துறை அதிகாரி சுங்கப்பகுதியினரால் கைது

## இருசாரருக்கும் இடையில் முறுகல் நிலை

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கடந்த புதனன்று குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவரைச் சுங்கப் பகுதியினர் கைது செய்ததை அடுத்து இரு தரப்பினருக்கு மிடையில் வ கடுபிடி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு ஆசியாவிலிருந்து நாடு திருப்பிய ஒருவரிடமிருந்து குளிர்சாதனப்பெட்டி மற்றும் ரி. வி. ஒன்றையும் சட்ட விரோதமான முறையில் கொள்வனவு செய்ய முயற்சித்த போதே இந்தப் பொலிஸ் அதிகாரி கைதுசெய்யப்பட்டார்.

மறுநாள் வியாழக்கிழமை, ஐரோப்பிய நாடு ஒன்றில் தொழில் செய்துவிட்டு நாடு திருபபிய இருவரை சுங்கப் பகுதியினர் பரிசோதனை செய்தபின் குற்றப் புலனாய்வுத் துறையினர் கைது செய்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த விமான நிலையச் சுங்கப்பொறுப்பதிகாரிமேலிடத்திற்குப் புகார் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் தரப்பிலும் புகார் செய்யப்பட்டது.

# விழிப்புக் குழு அமைப்பு

நாவற்குழி 'வனிதா' குடியிருப்பில் கடந்த வாரம் தொடக்கம் விழிபபுக்குழு இயங்கி வருகின்றது இரவுநேரங்களில் அனாவசியமாக குடியிருப்பிற்குள் நுழையும் வெளியாட்கள் பற்றியும் திருடும் நோக்குடன் சுற்றிததிரிவோர் பற்றியும் மேற்படி விழிப்புக்குழு தீவிர கண்காணிப்பு செலுத்தி வருகின்றது. அண்மையில் இரவு அகால நேரத்தில் இங்குள்ள ஆலயமொன்றில் மணி அடித்த ஒருவர் விழிப்புக் குழுவினால் பிடிக்கப்படடு விசாரணைக்கு உடபடுத்தப் பட்டபின் விடுவிக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது. (22)

# குடங்கள் விநியோகம்

போரூட் ஸ்தாபனம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து 166 தண்ணீர் எடுக்கும் குடங்களைப் பெற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு வழங்கி வருகின்றது. [42]

# பட்டப்பகலில் நுகேகொடையில் கொள்ளை

[கொழும்பு]

நுகேகொடையில் பட்டப் பகலில் துப்பாக்கி முனையில் சென்று டாக்டர் ஒருவரின் வீட்டில் ஒரு இலட்சம் ரூபா பணமும், நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டு. கொள்ளையர்கள் டாக்டரின் காரிலேயே தப்பிச் சென்றுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் நுகேகொடையில் வசிக்கும் டாக்டர் ஏ எஸ். டி.சில்வாவின் வீட்டுக்கு ஆயுதபாணிகளாகச் சென்ற 3 பேர் யன்னல் வழியாக நிதி சேகரிக்கும் பட்டியல் ஒன்றைக் காண்பித்து நிதி கேட்க, டாக்டர் கதவைத் திறந்து அவர்களை உள்ளே அழைத்து பட்டியலை வாங்கிப் பார்க்கவே ஒருவர் ரிவால்வரையும், மற்றவர் கத்தியையும் காண்பித்து டாக்டரை ஒரு அறைக்குள் பூட்டினர்.

பின்னர் அவரது மனைவியிடம் சென்று அலுமாரியைத் திறக்க வைத்து 100000 ரூபா பணத்தையும், நகைகளையும் அபகரித்துக் கொண்டு அவருடைய காரிலேயே தப்பிச் சென்றனர். கார் மாலையில் சிறிது தொலைவில் கை விடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விரைவில் நட்டஈடு கிடைக்கலாம்

(கொழும்பு)

வளைகுடா யுத்தத்தினால் தொழிலை இழந்து நாடு திரும்பிய இலங்கையருக்கான நட்டஈடுகள் விரைவில் வழங்கப்படவுள்ளது ஆகக்குறைந்தது இரண்டு லட்சம் ரூபா தொடக்கம் இந்த நட்டஈடு வழங்கப்பட விருப்பதாகவும், 84,000 இலங்கையர் இதனால் பயனடைய இருப்பதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக ஆராய்வதற்காக மார்ச் மாதமளவில் ஒரு உயர்மட்ட தூதுக்குழு கொழும்பு வரவுள்ளது.

# 197 ஆம் நாள் நினைவுநாளும் 27வது பிறந்த நாளும்



# மேஜர் அழகன்

[ஈழநாதம் பொறுப்பாளர்]
(செல்வராசா இளங்கோ)

வீரஜனனம்: 13-01-1966 வீரச்சாவு: 29-06-1992

உயர்ந்த நெறியில் வாழ்ந்தவர் வாழ்க்கையை ஆண்டுகளால் அளவிடக்கூடாது. செய்த செயல்களைக் கொண்டுதான் அளவிட வேண்டும்.

நிதமும் நின் நினைவில் வாடும் நெஞ்சங்கள்
குலோபல் என்ஜினியரிங் ரெக்னோலொஜி சேர்விசஸ்
32, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

11/1, செம்மணி ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

[சி-5743]

## சிந்தனைக்கு

சட்டத்தை மீறிப் பாதகச் செயலில் ஈடுபடுபவர்களுக்கு இரக்கம் காட்டுவது, உண்மையில் சமாதானத்தைக் கடைப்பிடிக்கும் குடிமக்களுக்கு கொடிய தண்டனையாகும்.

— ஜுனியஸ்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 18-01-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

# இஸ்ரேல் மீண்டும் ஐ. நா.விற்கு சவால்

கடந்த மாதம் 18 ஆம் திகதி இஸ்ரேலில் இருந்து நாடு கடத்தப்பட்ட 416 பாலஸ்தீனியர்களில் இருவர் போக மிகுதி 414 பேரின் நிலையும் இன்னமும் தீர்வு எதுவுமின்றி இழுபறி நிலையில் உள்ளது. இதன் காரணமாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட கூடாரங்களில் கடும் குளிரின் மத்தியில் இப்பாலஸ்தீனர்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாக வேண்டி ஏற்பட்டுள்ளது.

தாயக மண்ணிலிருந்து பாலஸ்தீனியரை நாடு கடத்திய இஸ்ரேலின் நடவடிக்கையும், அதன் பிடிவாதப் போக்கையும் உலகில் உள்ள நாடுகளில் பெரும்பாலானவை கண்டனம் செய்தபோதும் பாலஸ்தீனர்களைத் திரும்பப் பெறுவதில்லை என இஸ்ரேல் திட்டவட்டமாக அறிவித்து விட்டது. மேற்காசியாவிற்கான விசேட தூதுவர் ஹரேகான் இரண்டாவது தடவையாகவும் டெல் அவிவிற்கு மேற்கொண்ட விஜயம் தோல்வியில் முடிவுற்றுள்ளது. இதேவேளை பாலஸ்தீனர் நாடுகடத்தப்பட்டுள்ளமை சரியான நடவடிக்கை என்றும், இது இஸ்லாமிய அடிப்படைவாத 'பயங்கரவாதக்'குழுக்களுக்கு சரியான அடி எனவும் இஸ்ரேலியப் பிரதமர் ராபின் மீண்டும் தெரிவித்துள்ளார். மேலும் நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனியர்களை லெபனானோ அன்றி வேறெந்த நாடோ பொறுப்பேற்க வேண்டும் எனவும் இஸ்ரேல் வற்புறுத்தியும் வருகின்றது.

பாலஸ்தீனியர்களைப் பொறுத்து இஸ்ரேல் கடைப்பிடிக்கும் கொள்கைகளில் 'நாடுகடத்தல்' என்பது புதிதான தொன்றல்ல. இதற்கு முன்னரும் இஸ்ரேல் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. ஆனால், இன்று கெடுபிடிப் போர் முடிவிற்கு வந்து உலகத் தலைமைத்துவத்தை அமெரிக்கா ஏற்றுள்ள நிலையிலும் பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கென பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள இந் நடவடிக்கையானது இஸ்ரேலின் அடாவடித்தனம் இன்னமும்மாறவில்லை என்பதையேகாட்டுகின்றது.

ஆனால், கெடுபிடிப்போரின் பின் ஐ.நா.அமைப்பு கடைப்பிடிக்கும் போக்கு இவ் விவகாரத்தில் முரண்பாடானதாகவுள்ளது. கெடுபிடி யுத்தம் முடி

# தமிழ் குடும்பம் ஒன்றின் மீது நோர்வேயில் தாக்குதல்

(ஒஸ்லோ)

நோர்வேயில் இருக்கும் தமிழ்க் குடும்பமொன்று தாக்குதலுக்கு இலக்கானதில் பலத்த காயமடைந்துள்ளது. இச்சம்பவம் நோர்வேயில் பிரதமர் குரோ நேர்லம் புருட்லான்ட் வெளிநாட்டவர்களுக்கு எதிரானதாக்குதல்கள் அதிகரித்து வருவதாக தெரிவித்து இரு நாட்களின் பின்னர் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

நோர்வேயில் ஹெர்பிட் நகரில் வாழ்ந்த மயில்வாகனம் பாலசிங்கம் (33வயது)அவரது மனைவி சரோஜாதேவி (26) அவர்களது குழந்தைகளான ரஞ்சனா (6) நர்மதா(01)ஆகியோரே தாக்குதலுக்குஉள்ளானவர்கள் ஆகும்.

வீட்டின் முன் கதவுகளை உடைத்துக்கொண்டு உட்புகுந்த குண்டர்கள் தொலைபேசி இணைப்புக்களை துண்டித்துவிட்டு தாக்குதலைத்தொடங்கியதாகவும், இரத்தம் வழிந்தோடும்வரை தாக்குதல் தொடர்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சுமார் இருபது வயதை எட்டும் நான்கு நோர்வேஜிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும், அவர்களில் ஒருவர் முன்பு பாலசிங்கத்துடன் பணியாற்றியவர் எனவும் தெரியவருகிறது.

## அறக்கொடை

(யாழ்ப்பாணம்)

பண்டிதைசெல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 68 - வது பிறந்த தினத்தையொட்டி ஆரம்பிக்கப்பட்டுள்ள அறக்கொடைத் திட்டத்தில் இரு பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஐயாயிரம் ரூபா வீதம் அறக்கொடை வழங்கப்பட்டது.

இன்றுபல்கலைக் கழகத்தில் புகுவதற்கு அதிகபுள்ளிகளைப் பெற்றது மல்லாமல் மிகவும் கஷ்ட சீவியத்தில் இருக்கும் மாணவர்களுக்கு 5000/-ரூபா வீதம் அறக்கொடை வழங்கபடுகிறது என்றார்.

விழாவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீன கர்த்தா சண்முகநாதக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

# பல்கலைக்கழக இழுபறியால் 1,02,247மாணவர்கள் பாதிப்பு

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் தற்போது நிலவி வரும் இழுபறி நிலைகளினால் பல்கலைகழகத்திற்கு செல்லதகைமை அடைந்துள்ள 1, 02, 247 மாணவ, மாணவிகள் பாதிப்படைந்துள்ளனர்.

1991ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் 47310 மாணவர்களும், 1992 ஆம் ஆண்டு 54 937 மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு செல்ல தகைமை பெற்றுள்ளனர் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பீடாதிபதிகளும், ஏனைய விரிவுரையாளர்களும் தமது பதவிகளில் இருந்து விலகியமையால் இந்த நடவடிக்கை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. இதனால் பல்கலைக்கழக உள்வாரி மாணவர்களை விட வெளிவாரி மாணவர்களே பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

1991ஆம் ஆண்டு க. பொ. த உ/த பரீட்சை உரியகாலத்தில் நடத்த முடியாமல் போனதால் பல மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற்று சென்றுவிட்டனர். இதனால் இவர்களின் உயர்கல்வி பாதிப்படைந்துவிட்டது. தற்போதைய நிலைபரங்களினால்இந் நிலைமை மேலும் பாதிப்படையக் கூடும் என்று கல்வி உயர் அதிகாரி ஒருவர் 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்தார்.

மன்னாரில்

# றிசர்வ் பொலிஸ்காரர் கைது புலிகளுடன் தொடர்பாம

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் றிசர்வ் பொலிஸ்படையை சேர்ந்த ஒருவர் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளார். இக் குறிப்பிட்ட றிசர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்தவர் மன்னார் மாவட்டத்தில் புலிகளின் தளம் என்று வர்ணிக்கப்படும் ஒரு கிராமத்திற்கு ஆயுதபாணியாகவும், தனித்தும அடிக்கடி சென்று வந்ததாக பொலிசார் கூறுகின்றனர். இவர் மீதான சந்தேகம் உறுதிப்படுத்தப்படுமானால் புலிகளுக்கு பொலிசாரின் புலனாய்வுப் பகுதியிலிருந்து பல தகவல்கள் கிடைத்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது

# பம்பாய்க்கு ராணுவம் விரைவு வன்முறைகள் அதிகரிப்பு

[டில்லி]

பம்பாய் நகரின் தொல்லை சூழ்ந்த பகுதிகளில் பணியில் ஈடுபடுத்துவதற்கென எல்லைப் பாதுகாப்புப் படையின் மேலும் மூன்று அணிகள் அனுப்பப்பட்டுள்ளன.

ஆர். ஏ. எஸ். என்னும் அதிரடிப் படையும், மேலும் சில இராணுவ அணிகளும் இன்னும் கூடுதலாக அனுப்பி வைக்கப்படும் எனவும் உள்ளூர் பொலிசாருடன் இணைந்து இப்படையினர் பணியாற்றுவர் எனவும் தெரியவருகின்றது.

இதனிடையே ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டிருந்தபோது கத்திக் குத்துச் சம்பவங்களும் தீ வைப்பு சம்பவங்களும் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் தாதர் குர்லா பகுதிகளில் நிலைமை பதற்றமாகவே இருப்பதாகவும், பொது வாகனங்கள் மற்றும் பஸ்கள் ஓடவில்லை எனவும், புறநகர்ப் பகுதிகளுக்கு ஓடும் ரயில்களும் பெரும்பாலும் காலியாகவே ஓடிக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## கூட்டுப்பயிற்சி

(புதுடில்லி)

ஓமானும், இந்தியாவும் இரண்டு நாள் கடற்படைப் பயிற்சியை ஓமான் கடற்கரையில் மேற்கொண்டுள்ளன. இந்தியக் கடற்படை வனைகுடா பகுதியைச் சேர்ந்த நாடொன்றுடன் கூட்டுப் பயிற்சியை மேற்கொள்வது இதுவே முதற்தடவையாகும். இந்தியக் கடற்படையின் மேற்கு அணியைச் சேர்ந்த மூன்று கப்பல்களும், ஓமான் கடற்படையின் கரையோரப் பிரிவுக் கப்பல்களும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன.

# குடியரசு தின வைபவங்கள் புறக்கணிக்க கோரிக்கை

[புதுடில்லி]

இந்தியாவின் குடியரசு தின வைபவங்கள் ஜனவரி 26ஆம் திகதி இடம்பெறும் போது அவற்றைப் புறக்கணிப்பது என்று அகில இந்திய பாபர் மசூதியின் செயற் கமிட்டி தீர் முஸ்லிம் லீக் பாபர் மசூதி செயற்கமிட்டியின் அழைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அத்துடன் பெரும்பாலான திரைப்பட நடிகர்கள் மற்றும் கிரிக்கட் வீரர்களும் கூட பாபர் மசூதி செயற்கமி

# ஈராக்கின் செயலுக்கு தகுந்த பதில் கிடைக்கும்

ஐ.நா. தலைமைச் செயலர்

[பேர்லின்]

குவைத்திற்குள் ஊடுருவும் ... றிற்கு எதிரான இத்தகைய அச்சுறுத்தல்களை ஐ.நா சகித்

இன்னமும் தீர்வு ஏதுமின்றி இழுபறி நிலையில் உள்ளது. இதன் காரணமாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட கூடாரங்களில் கடும் குளிரின் மத்தியில் இப்பாலஸ்தீனர்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாக வேண்டி ஏற்பட்டுள்ளது.

தாயக மண்ணிலிருந்து பாலஸ்தீனியரை நாடு கடத்திய இஸ்ரேலின் நடவடிக்கையும், அதன் பிடிவாதப் போக்கையும் உலகில் உள்ள நாடுகளில் பெரும்பாலானவை கண்டனம் செய்தபோதும் பாலஸ்தீனர்களைத் திரும்பப் பெறுவதில்லை என இஸ்ரேல் திட்டவட்டமாக அறிவித்து விட்டது. மேற்காசியாவிற்கான விசேட தூதுவர் ஹரேகான் இரண்டாவது தடவையாகவும் டெல் அவிவிற்கு மேற்கொண்ட விஜயம் தோல்வியில் முடிவுற்றுள்ளது. இதேவேளை பாலஸ்தீனர் நாடுகடத்தப்பட்டுள்ளமை சரியான நடவடிக்கை என்றும், இது இஸ்லாமிய அடிப்படைவாத 'பயங்கரவாதக்'குழுக்களுக்கு சரியான அடி எனவும் இஸ்ரேலியப் பிரதமர் ராபின் மீண்டும் தெரிவித்துள்ளார். மேலும் நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனியர்களை லெபனானோ அன்றி வேறெந்த நாடோ பொறுப்பேற்க வேண்டும் எனவும் இஸ்ரேல் வற்புறுத்தியும் வருகின்றது.

பாலஸ்தீனியர்களைப் பொறுத்து இஸ்ரேல் கடைப்பிடிக்கும் கொள்கைகளில் 'நாடுகடத்தல்' என்பது புதிதான தொன்றல்ல. இதற்கு முன்னரும் இஸ்ரேல் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. ஆனால், இன்று கெடுபிடிப் போர் முடிவிற்கு வந்து உலகத் தலைமைத்துவத்தை அமெரிக்கா ஏற்றுள்ள நிலையிலும் பாலஸ்தீனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கென பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள இந் நடவடிக்கையானது இஸ்ரேலின் அடாவடித்தனம் இன்னமும்மாறவில்லை என்பதையேகாட்டுகின்றது.

ஆனால், கெடுபிடிப்போரின் பின் ஐ.நா.அமைப்பு கடைப்பிடிக்கும் போக்கு இவ் விவகாரத்தில் முரண்பாடானதாகவுள்ளது. கெடுபிடி யுத்தம் முடிவடைந்த பின்னர் ஐ. நா. மிகவும் தளர்ச்சியாகவும் தீவிரமின்றியும் மேற்கொள்ளும் விவகாரங்களில் பாலஸ்தீன விவகாரமே முக்கியமானதெனலாம்.

அதாவது ஈராக், கம்போடியா, சோமாலியா போன்ற நாடுகள் தொடர்பான விவகாரங்களுக்கு துரிதகதியில், தீர்மானங்களை எடுக்கும் மேற்குலகமும் ஐ நா. சபையும் இப்பாலஸ்தீன விவகாரத்திலும், முன்னாள் யூக்கோசெலவாக்கிய விவகாரத்திலும் தீர்மானங்களை எடுப்பதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் தீவிர அக்கறை காட்டுவதாக இல்லை.

ஐ. நா. சபையின் இப்பக்கச் சார்பான போக்கிற்கு அமெரிக்காவும் அதன் மேற்குலக கூட்டாளிகளினதும், நடவடிக்கைகளே காரணமாகும், கெடுபிடிப்போர் முடிவுற்ற பின்னர், ஐ நா.சபையை தமது பூரணகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ள அமெரிக்கா அதனை ஓர் உலக ஸ்தாபனம் என்ற நிலையை மாற்றி ஓர் அமெரிக்க ஸ்தாபனம் போல் ஆக்கியுள்ளது. இதனால், தற்பொழுது அமெரிக்காவின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பவும், அவசரம் அவசரமின்மைக்கு ஏற்பவுமே ஐ.நா.தீர்மானங்களை நிறைவேற்றுகின்றது.

இந்நிலையிலேயே இஸ்ரேலின் நாடுகடத்தல் நடவடிக்கைகளுக்கு ஐ நா. ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு அப்பால் செல்லாமல் இஸ்ரேல் மீதான கண்டனத்துடன் நிறுத்திக்கொண்டது. இதனை இஸ்ரேல் முன்னரே நன்குணர்ந்துள்ளமையே அதனை பாலஸ்தீனியரை நாடு கடத்தத் தூண்டியுள்ளதோடு, இயலுமானால் ஐ.நா. பொருளாதாரத்தடை தீர்மானத்தை நிறைவேற்றட்டும் எனவும் சவால்விடும் அளவிற்கும் சென்றுள்ளது.

---

...களும், 1992ஆம் ஆண்டு 54 937 மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு செல்ல தகைமை பெற்றுள்ளனர் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பீடாதிபதிகளும், ஏனைய விரிவுரையாளர்களும் தமது பதவிகளில் இருந்து விலகியமையால் இந்த நடவடிக்கை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது. இதனால் பல்கலைக்கழக உள்வாரி மாணவர்களை விட வெளிவாரி மாணவர்களே

## நிசர்வ் பொலிஸ்காரர் கைது புலிகளுடன் தொடர்பாம

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் நிசர்வ் பொலிஸ்படையை சேர்ந்த ஒருவர் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளார். இக் குறிப்பிட்ட நிசர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்தவர் மன்னார் மாவட்டத்தில் புலிகளின் தளம் என்று வர்ணிக்கப்படும் ஒரு கிராமத்திற்கு ஆயுதபாணியாகவும், தனித்தும் அடிக்கடி சென்று வந்ததாக பொலிசார் கூறுகின்றனர். இவர் மீதான சந்தேகம் உறுதிப்படுத்தப்படுமானால் புலிகளுக்கு பொலிசாரின் புலனாய்வுப் பகுதியிலிருந்து பல தகவல்கள் கிடைத்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது

...புகுவதற்கு அதிகபுள்ளிகளைப் பெற்றதமல்லாமல் மிகவும் கஷ்ட சீவியத்தில் இருக்கும் மாணவர்களுக்கு 5000/-ரூபா வீதம் அறக்கொடை வழங்கப்படுகிறது என்றார்.

விழாவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனகுருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீன கர்த்தா சண்முகநாதக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

---

# பம்பாய்க்கு ராணுவம் விரைவு வன்முறைகள் அதிகரிப்பு

[டில்லி]

பம்பாய் நகரின் தொல்லை சூழ்ந்த பகுதிகளில் பணியில் ஈடுபடுத்துவதற்கென எல்லைப் பாதுகாப்புப் படையின் மேலும் மூன்று அணிகள் அனுப்பப்பட்டுள்ளன.

ஆர். ஏ எஸ். என்னும் அதிரடிப் படையும், மேலும் சில இராணுவ அணிகளும் இன்னும் கூடுதலாக அனுப்பி வைக்கப்படும் எனவும் உள்ளூர் பொலிசாருடன் இணைந்து இப்படையினர் பணியாற்றுவர் எனவும் தெரியவருகின்றது.

இதனிடையே ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டிருந்தபோது கத்திக் குத்துச் சம்பவங்களும் தீ வைப்பு சம்பவங்களும் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் தாதர் குர்லா பகுதிகளில் நிலைமை பதற்றமாகவே இருப்பதாகவும், பொது வாகனங்கள் மற்றும் பஸ்கள் ஓடவில்லை எனவும், புறநகர்ப் பகுதிகளுக்கு ஓடும் ரயில்களும் பெரும்பாலும் காலியாகவே ஓடிக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## கூட்டுப்பயிற்சி

(புதுடில்லி)

ஓமானும், இந்தியாவும் இரண்டு நாள் கடற்படைப் பயிற்சியை ஓமான் கடற்கரையில் மேற்கொண்டுள்ளன. இந்தியக் கடற்படை வளைகுடா பகுதியைச் சேர்ந்த நாடொன்றுடன் கூட்டுப் பயிற்சியை மேற்கொள்வது இதுவே முதற் தடவையாகும். இந்தியக் கடற்படையின் மேற்கு அணியைச் சேர்ந்த மூன்று கப்பல்களும், ஓமான் கடற்படையின் கரையோரப் பிரிவுக் கப்பல்களும் இந்தப் பயிற்சியில் பங்கேற்கின்றன.

## குடியரசு தின வைபவங்கள் புறக்கணிக்க கோரிக்கை

[புதுடில்லி]

இந்தியாவின் குடியரசு தின வைபவங்கள் ஜனவரி 26ஆம் திகதி இடம்பெறும் போது அவற்றைப் புறக்கணிப்பது என்று அகில இந்திய பாபர் மசூதியின் செயற் கமிட்டி தீர்மானம் எடுத்துள்ளது.

இதேவேளை அகில இந்திய முஸ்லிம் லீக் பாபர் மசூதி செயற்கமிட்டியின் அழைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அத்துடன் பெரும்பாலான திரைப்பட நடிகர்கள் மற்றும் கிரிக்கட் வீரர்களும் கூட பாபர் மசூதி செயற்கமிட்டியின் அழைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

## ஈராக்கின் செயலுக்கு தகுந்த பதில் கிடைக்கும்

ஐ.நா. தலைமைச் செயலர்

[பெர்லின்]

குவைத்திற்குள் ஊடுருவும் வகையில், ஈராக் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு ஐ நா.பாதுகாப்புச்சபை தக்க தருணத்தில் பதிலளிக்கும் என்று ஐ நா.தலைமைச்செயலர் பூட்ரஸ் பூட்ரஸ்காலி கூறியுள்ளார். தற்சமயம் ஜேர்மனிக்கு விஜயம்செய்துள்ள அவர்அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில்: மேலும் உறுப்பு நாடு ஒன்றிற்கு எதிரான இத்தகைய அச்சுறுத்தல்களை ஐ நா சகித்துக்கொள்ளாது எனவும் குறிப்பிட்டார்.

குவைத்திற்குள் ஊடுருவல் நடத்திய சுமார் இருநூறு ஈராக்கியப் படையினர் அங்கிருந்து ஏவுகணைகள் உட்பட பெருந்தொகை ஆயுதங்களை கைப்பற்றிச் சென்றிருப்பது தெரிந்ததே.

## பழனித் தொகுதி உட்பட இடைத்தேர்தல் ஒத்திவைப்பு

[சென்னை]

பழனி லோக்சபா தொகுதிக்கான தேர்தல் ஒத்திப் போடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டின் பழனிஉட்பட மூன்று லோக்சபாத் தொகுதிகளுக்கும் ஒன்பது சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் அடுத்த மாதம் பதினைந்தாம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

எனினும்பின்னர் நாட்டுநிலை சீரானதாக இல்லாமல் இருப்பதையடுத்தும்மத்தியஅரசுவிடுத்த வேண்டுகோளையடுத்தும் தேர்தல் கமிஷன் இத்தேர்தல்களை ஒத்திவைத்துள்ளது. ஆயினும் நாகலாந்து, மேகாலயா, திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கான சட்டப் பேரவைத் தேர்தல்கள் குறிப்பிடப்பட்டபடி நடைபெறவுள்ளது.

## ஈராக்குடன் போர் புரிவதில் பங்கேற்கப் போவதில்லை

- ரஷ்யா தெரிவிப்பு

[மொஸ்கோ]

ஈராக்கிற்கு எதிரான எந்தவொரு இராணுவ நடவடிக்கையிலும் தான் பங்கேற்கப் போவதில்லையென ரஷ்யா கூறியுள்ளது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் அந்தரே கொசிரேனாவ் மேலும் கூறுகையில் ஈராக் ஐ நா.பாதுகாப்பு சபை தீர்மானத்தை பின்பற்றியே ஆக வேண்டும். இல்லையேல் அது மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் தெரிவித்தார்.

## இடைத்தேர்தல் ஒத்திவைப்பு அரசியல் உள்நோக்கமுண்டு

- மு. கருணாநிதி

(சென்னை)

பழனிதொகுதியின் இடைத்தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளமையானது அரசியல் உள் நோக்கமுடையது என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி குறை கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கையிலேயே தி. மு. க. தலைவர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை பழனி தொகுதிக்கான லோக்சபா தேர்தலோடு ராணிப்பேட்டை சட்டமன்றத்தொகுதிக்கும் இடைத்தேர்தலை நடத்துமாறும், இல்லையேல் பழனி தேர்தலையும் ஒத்தி வைக்கும்படி தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரியிருந்தது தெரிந்ததே.

## மீண்டும் நாடுதிரும்புவதற்கு இஸ்ரேல் அனுமதி மறுப்பு

நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனியரை மீண்டும் அனுமதிப்பதற்கு இஸ்ரேல் அனுமதி மறுத்துள்ளது. ஐ நாவின் வேண்டுகோளை ஏற்க மறுத்திருக்கும் இஸ்ரேல் பிரதமர், நாடுகடத்தப்பட்டமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமாயின் மேற்காசிய சமாதானப் பேச்சுக்களை அது மிகவும் பாதிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

O/L

DAY CLASS

(பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மாத்திரம்)

ஆரம்பம்

16-1-93 காலை 7 45

யூனிவேர்சல்

சுந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி/5769)


## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் ஆ. கி. குணசிங்கராசா

B. A (Cey), Dip In. Ed (Cey), M.A (Jaffna.)

(விரிவுரையாளர், கல்வியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

16-12-1992 அன்று அமரத்துவமடைந்த அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட அன்பர்கள், அனுதாபிகள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பட்டதாரி மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அனுதாபச் செய்தி அனுப்பி எமது துக்கத்

## சாளரம் வாசகர் வட்டம்

(கொழும்புத்துறை)

நாயன்மார்கட்டு சனசமூக நிலைய நிர்வாகிகள் சாளரம் இதழுக்கான வாசகர் வட்டத்தை ஆரம்பித்துள்ளனர். நிலையத் தலைவர் திரு. க. கேந்திரன் தலைமையில் திரு. அ. மதியழகன், தி. க. சுரேஸ் குமார், திரு. யோ. கமலரூபன் ஆகியோர் ஒரு குழுவாக இயங்குவதாக ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. (24)

சுப்பர்

மிந்த பகுதியில் வீழ்ந்து வெடித்தன. எனினும் அப்பகுதி மக்கள் மிகவும் முன்னெச்சரிக்கையாக பதுங்கு குழிகள் மற்றும் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தமையால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை என தெரிய வருகின்றது.

மேற்படி மூன்று குண்டுகளும் வீழ்ந்து வெடித்த இடத்தில் பாரிய மூன்று குழிகளைக் காணக் கூடியதாக இருந்தது. (பா) (86)

ஐ. நா. பொது

மகஜரை மனித முன்னேற்ற நடுநிலைப் பணிப்பாளர் வண. எம். ஈ. பயஸ் சர்வதேச செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதியிடம் சமர்ப்பித்தார். அவர் மகஜரை ஐ நா. பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைப்பார்.

மகஜரின் பிரதிகள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிற்கும், அனைத்து வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

மட்டக்களப்பு

தார்.

இச்சுற்றி வளைப்பின் போது சந்தேகத்திற்குரியவர்களாக கருதப்படுவோர் கொடுமையான முறையில் தாக்கப்படுகின்றனர் என்றும் அப்பெண் குறிப்பிட்டார். (தி)

புலிகளிடம்

வெடி மருந்துகள் போன்றவற்றை வைத்திருந்ததாகக் குற்றஞ் சுமத்தப்படுள்ளது. முத்துத்தம்பிவெங்கேஸ்வரன் என்பவருக்கு எதிராகச் சின்னகுடாவில் பொலிஸ் நிலையம், இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவை அமைந்திருக்கும் முறை தொடர்பாகப் புலிகளுக்குத் தகவல் கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

20-6-90 — 18-3-91 கால எல்லைக்குள் பட்டிருப்புப் பகுதியில் குமுதன், சுரேஷ்

# பம்பாயிலிருந்து தமிழரை வெளியேறுமாறு அறிவிப்பு

## பலியானோர் தொகை 400ஆக அதிகரிப்பு

பம்பாயில் கடந்த ஏழு நாள்களாக நடந்து வரும் இந்து-முஸ்லிம் கலவரங்களில் இதுவரை 400 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்து அடிப்படை வாதிகளான விஷ்வ ஹிந்துப் பரிஷித் தொண்டர்களின் செயல்களினாலேயே கலவரம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம்களை மாத்திரமல்ல ஏனைய மாகாணங்களைச் சேர்ந்தவர்களையும், குறிப்பாகத் தென் இந்தியர்களை வெளியேறும்படி விஸ்வஹிந்துப் பரிஷித் அறிவித்துள்ளது. இதுவரை 10,000 பேர் அகதிகளாகத் தமிழ் நாடு வந்துள்ளனர்.

கேரள முதலமைச்சர் கருணாகரன் கேரள மக்கள் பாதுகாப்புக் கருதிப் பேச்சுவார்த்தை நடத்த கேரள பொலிஸ் உயர் அதிகாரியை பம்பாய் அனுப்பியுள்ளார்.

பம்பாய் புகையிரத நிலையம் பாரிய அகதிமுகாம் போல் காட்சியளிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச

கிளிநொச்சி கச்சேரியில் அரசாங்க அதிபர் இல்லாததினால் திட்டப்பணிப்பாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. அவர் இதனை ஏற்றுக் கொண்டதுடன் மகஜரை விசேட தூதுவர் மூலம் உடனடியாக அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைப்பதாக உறுதி அளித்தார்.

இப்பேரணிக்கு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம், சென்யோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர் உதவியுடன் தமிழீழக் காவல் துறையினர் காவல் கடமையில் ஈடுபட்டனர். (16)

மாநகர

திர பிரசித்தி பெற்ற இந்நகருக்கு வருகை தந்திருக்கும் தங்களை பெருமை மிக்க இந்நகர மக்களின் சார்பிலும் இம்மாநகராட்சி மன்றத்தின் சார்பிலும் வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். வடபகுதி வாழ் மக்களினுடைய விடயங்களில் தாங்கள் கொண்டுள்ள அக்கறை குறித்து நாம் அறிவோம்.

சீர்மிக்க உயர் வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்கின்ற இந்நகர மக்கள் சொல்லொணாத் துயரங்களை இன்று அனுபவிக்கின்றனர். துன்பம், துயரம், நோய், மரணம், அழிவு இவை இப்பகுதியின் சாதாரண அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. இவ்வாறான துன்பம் மிகுந்த இச்சந்தர்ப்பத்தில் தங்களினுடைய வருகையானது ஒரு நம்பிக்கையை ஊட்டுவதாக உள்ளது.

கடந்த இரு ஆண்டுகளாக மின்சாரம் மற்றும்எரிபொருள் இல்லாமையினால் எமது சேவைகள் முழுவதுமே ஸ்தம்பிதமடைந்துள்ளன. நகர மக்களில் பெரும்பாலானோர் குடிநீருக்கு குழாய்நீர்விநியோகத்தினையே நம்பியிருப்பவர்கள். அந்த வசதியையும் தற்

ஆயருக்கு

வும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்தியதற்கு மாகாண சபை அமைச்சர் ஜோன் அமரதுங்க பாராளுமன்றத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

கிளாலியில்

படுகொலை செய்யப்பட்டதுடன் பலர் காணாமல்போனதும் தெரிந்ததே.

இத்தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்தோரில் ரோகினிதேவ நடராஜா [வயது26] என்பவர் அவசர சிகிச்சைக்காக வவுனியா கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார்.

கடந்த 7ஆம் திகதி இப்பெண் அங்கு மரணமடைந்து விட்டதாகவும் உறவினர்கள் இவரது சடலத்தை எடுத்துச் சென்றதாகவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அங்கிலிக்கன்

லெண்ண முயற்சி என்று ஏ. எவ். பி செய்தியாளர் அமாம் ஜெயசிங்க பி. பி. ஸிக்குத் தெரிவித்துள்ளார். டெயிலி நியூஸ் செய்திபற்றிக் கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயர் யாழ்ப்பாணத்துக்குப் போனதும் அவர் அங்கு சென்ற முறையும் மீளப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கும் அறிகுறிகளையே காட்டுகின்றன என்றும்,

ஆயரின் விஜயத்தைப் பயன்படுத்தி இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்கலாம் என்றாலும் அரசுநேரடியாகப் புலிகளுடன் பேசுவதை இப்போது விரும்பவில்லை என்றும்அமால் ஜெயசிங்க மேலும் தெரிவித்தார்.

அதேவேளை அரசும் பிரச்சினையை ஒரு தீர்வுக்குக் கொண்டுவர விரும்புகிறதா? என்பது தெளிவாகத் தெரியவில்லை வரும் தேர்தலை முன்விட்டு வடக்கு-கிழக்கில் வன்செயல்கள் இடம் பெறாது என்றுதெரிகிறதுஎன்றும்அமால் ஜெயசிங்கா பி.பி ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

குமாரி

படுகின்ற இக்கப்பலிலேயே மேற்படி பெறுபேறுகள் எடுத்துவரப்படவுள்ளதாக தெரிய வருகின்றது

இத்தகவலை தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

12.01.1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7969

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-6983, 28-4672, 26-5157, 24-0336, 26-5814,
24-3262, 24-5460, 24-5955, 28-7662, 26 9703,
26 5405, 41-6933, 24-0416, 26-7663, 28-6748,
26-5734, 26-0525, 42-0733, 41-4194.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி/5769)


## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் ஆ. கி. குணசிங்கராசா

B. A (Cey), Dip In. Ed (Cey), M.A (Jaffna.)

(விரிவுரையாளர், கல்வியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

16-12-1992 அன்று அமரத்துவமடைந்த அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட அன்பர்கள், அனுதாபிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பட்டதாரி மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அனுதாபச் செய்தி அனுப்பி எமது துக்கத்தினை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றி நவில்கின்றோம்.

15-01-93 வெள்ளி காலை அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அன்றைய மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— குடும்பத்தினர்

'கங்கா பதி'
சிவராசா வீதி,
கம்பர்மலை
வல்வெட்டித்துறை.
(3989)

## விசேட அறிவித்தல்

09-01-93, 12-01-93 ஈழநாதம் பத்திரிகையில் வந்த விளம்பரத்தின்படி எமது நிறுவனத்தில் ஆரம்பிக்க இருந்த 1993 வினா, விடை வகுப்புகள் மறு அறிவித்தல் வரும்வரை நிறுத்தப்பட்டுள்ளது.

[BECON]
பாரதிதாசன் கல்வி நிறுவனம்,
(சி-5767) யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


### ஐ. நா. பொது

மகஜரை மனித முன்னேற்ற நடுநிலையப் பணிப்பாளர் வண. எம். ஈ. புயஸ் சர்வதேச செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதியிடம் சமர்ப்பித்தார். அவர் மகஜரை ஐ. நா. பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைப்பார்.

மகஜரின் பிரதிகள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிற்கும், அனைத்து வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

### மட்டக்களப்பு

தார்.

இச்சுற்றி வளைப்பின் போது சந்தேகத்திற்குரியவர்களாக கருதப்படுவோர் கொடுமையான முறையில் தாக்கப்படுகின்றனர் என்றும் அப்பெண் குறிப்பிட்டார். (தி)

### புலிகளிடம்

வெடி மருந்துகள் போன்றவற்றை வைத்திருந்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

முத்துத்தம்பி வெங்கேஸ்வரன் என்பவருக்கு எதிராகச் சீனன்குடாவில் பொலிஸ் நிலையம், இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவை அமைந்திருக்கும் முறை தொடர்பாகப் புலிகளுக்குத் தகவல் கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

20-6-90 — 18-3-91 கால எல்லைக்குள் பட்டிருப்புப் பகுதியில் குமுதன், சுரேஷ்கான் என்பவர்களுடன் இலங்கைக் குடியரசைச் சட்ட விரோதமான முறையில் கவிழ்க்கச் சதிசெய்ததாக அவசர காலச் சட்டத்தின் கீழ் சிதம்பரம் சிவகாமிநாதன் என்பவருக்கு எதிராகக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

நாகமுத்து பன்னீர்ச்செல்வம் என்பவருக்கு எதிராக 1-1-91 — 31-12-91 கால எல்லைக்குள் கொக்கட்டிச்சோலையில் நாகேஷ் என்பவரிடம் சட்டவிரோதமான துப்பாக்கி ஒன்று இருந்ததைத் தெரிந்தும் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கத் தவறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கதிர்வேல் விஜயகுமார் என்பவருக்கு எதிராக, புலிகள் இயக்கத்தினர் நால்வரிடம் துப்பாக்கி, கைக்குண்டு போன்ற ஆயுதங்கள் இருப்பதை அறிந்தும் பொலிஸாருக்குத் தகவல்கொடுக்க மறுத்ததாக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

### சமஷ்டி

இளம்பிக்குகள் முன்னணி, சிங்கள முன்னணி தேசருச இயக்கம் ஆகியன இணைந்து செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

இப்பேரணிக்கு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம், சென்யோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர் உதவியுடன் தமிழீழக் காவல் துறையினர் காவல் கடமையில் ஈடுபட்டனர். (16)

### மாநகர

திர பிரசித்தி பெற்ற இந்நகருக்கு வருகை தந்திருக்கும் தங்களை பெருமை மிக்க இந்நகர மக்களின் சார்பிலும், இம் மாநகராட்சி மன்றத்தின் சார்பிலும் வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். வடபகுதி வாழ் மக்களினுடைய விடயங்களில் தாங்கள் கொண்டுள்ள அக்கறை குறித்து நாம் அறிவோம்.

சீர்மிக்க உயர் வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்கின்ற இந்நகர மக்கள் சொல்லொணாத் துயரங்களை இன்று அனுபவிக்கின்றனர். துன்பம், துயரம், நோய், மரணம், அழிவு இவை இப் பகுதியின் சாதாரண அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. இவ்வாறான துன்பம் மிகுந்த இச் சந்தர்ப்பத்தில் தங்களினுடைய வருகையானது ஒரு நம்பிக்கையை ஊட்டுவதாக உள்ளது.

கடந்த இரு ஆண்டுகளாக மின்சாரம் மற்றும் எரிபொருள் இல்லாமையினால் எமது சேவைகள் முழுவதுமே ஸ்தம்பிதமடைந்துள்ளன. நகர மக்களில் பெரும்பாலானோர் குடிநீருக்கு குழாய்நீர் விநியோகத்தினையே நம்பியிருப்பவர்கள். அந்த வசதியையும் தற்போது இழந்துள்ளனர் இதன் விளைவாக நீரினால் பரவும் நோய்களும் அதிகரித்து வருகின்றன மருந்து வகைகள், தொற்றுநீக்கிகள் இவற்றின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடு காரணமாக மரண வீதமும், நோய் நிகழ்வு வீதமும் உயர்ந்துள்ளன. தாய் சிசு மரண வீதத்திலும் அதிகரிப்பு காணப்படுகின்றது. மக்களின் போஷாக்குநிலையில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி காரணமாக குருதிச் சோகையும் கூடுதலாக உள்ளது. இதனால் ஒரு நலிவடைந்த சமுதாயம் உருவாகுவதைத் தவிர்க்க முடியாததாகின்றது. எமது மக்கள் அச்சம் பீதி காரணமாக ஏற்படும் உளவியல் பாதிப்புக்குள்ளாகி வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். தற்போது விவசாயம், மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டமையினால் வருமானத்தையும், தொழிலையும் இழந்து நகர மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர் தபால் சேவையில் ஏற்படும் தாமதங்கள் வெளியிடங்களிலுள்ளவர்களுடனான எமது தொடர்பினைத் துண்டிக்கும் விதத்தில் அமைந்திருப்பது எமது கவலையை மேலும் இரட்டிப்பாக்குகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபை அமைச்சர் ஜோன் அமரதுங்க பாராளுமன்றத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

### கிளாலியில்

படுகொலை செய்யப்பட்டதுடன் பலர் காணாமல்போனதும் தெரிந்ததே.

இத்தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்தோரில் ரோகினிதேவி நடராஜா [வயது26] என்பவர் அவசர சிகிச்சைக்காக வவுனியா கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார்.

கடந்த 7ஆம் திகதி இப்பெண் அங்கு மரணமடைந்துவிட்டதாகவும் உறவினர்கள் இவரது சடலத்தை எடுத்துச் சென்றதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சிங்க மேலும் தெரிவித்தார்.

அதேவேளை அரசும் பிரச்சினையை ஒரு தீர்வுக்குக் கொண்டுவர விரும்புகிறதா? என்பது தெளிவாகத் தெரியவில்லை வரும் தேர்தலை முன்னிட்டு வடக்குக் - கிழக்கில் வன்செயல்கள் இடம் பெறாது என்று தெரிகிறது என்றும் அமால் ஜெயசிங்கா பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

### குமாரி

படுகின்ற இக்கப்பலிலேயே மேற்படி பெறுபேறுகள் எடுத்துவரப்படவுள்ளதாக தெரிய வருகின்றது

இத்தகவலை தற்சமயம் கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 12.01.1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7969

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-6983, 28-4672, 26-5157, 24-0336, 26-5814, 24-3262, 24-5460, 24-5955, 28-7662, 26 9703, 26 5405, 41-6933, 24-0416, 26-7663, 28-6748, 26-5734, 26-0525, 42-0733, 41-4194.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-7327, 22-9187, 26-0382, 24-5454, 28-2049, 26-5882, 27-4289, 40-2780, 28-1677, 27 2016, 26-1583, 26-3130, 27-9416, 26-1019, 26 7286, 41-5481, 28-9327, 27-8879, 28 3735, 42-2355, 40-7584, 42-9345, 42-2323, 27-2034, 24-3844, 22 3088

## மரண அறிவித்தல்

### நாகரத்தினம் கந்தையா

கல்வியங்காட்டை பிறப்பிடமாகக் கொண்டவரும், வட்டக்கச்சி சில்வா வீதி, 119-ம் இலக்க இல்லத்தில் வசித்து வந்தவரும் ஆகிய நாகரத்தினம் கந்தையா 5-1-93 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் கல்வியங்காட்டை சேர்ந்த காலஞ்சென்ற நாகரத்தினம் பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், செல்லத்துரை, இராசம்மா, துரைசிங்கம், விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவமணி, [வட்டக்கச்சி]. சண்முகராசா (தச்சடம்பன்), சச்சிதானந்தம் (பிரான்ஸ்), சிவமணி (கனகபுரம்), ஜெயலட்சுமி (வட்டக்கச்சி), விஜயலட்சுமி (வட்டக்கச்சி), சாம்பசிவம் (ஜேர்மனி), காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பவானந்தன், தவமலர், வனிதாதேவி, தில்லையம்பலம், நடராசா, கமலாதேவி, சிவநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர் இவரது பூதவுடல் 5-1-93 மாலை மம்மில்குளம் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

(3986) தவமணி (மகள்)